بسم الله الرحمن الرحيم

# Eid-Ul-Fitr

# Sermon




05 June 2019

(01 Shawwal 1440 AH)

தனது தோழர்கள் மற்றும் உலக முஸ்லீம்களுக்கு ஈது திருநாள் நல்வாழ்த்துகள் கூறியபின்பு தஷஹ்ஹீதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் ஈதுல் பித்தர் பேருரையை ஆரம்பித்தார்.

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH MUNIR AHMAD AZIM**

## WHAT IS EID-UL- FITR?

## ஈதுல் பித்தர் என்றால் என்ன?

**TAMIL VERSION /** தமிழ் பதிப்பு

அல்லாஹ்வின் மிகுந்த அருளால் ஒரு புதிய ஈதுல் பித்தர் கொண்டாட்டத்திற்காக நாம் ஒரு முறை கூட இங்கு ஒன்று திரண்டிருக்கின்றோம்.

“பித்தர்” என்ற வார்த்தைக்கு நோன்பை முறிப்பது என்று அர்த்தம். இ.ஃ.ப்தார் என்ற வார்த்தையும் அதே உற்பத்திஸ்தானத்திலிருந்து பெறப்பட்டதாகும். ஈதுல் பித்தர் என்ற சொல்லுக்கு நோன்பு நோற்பின் முடிவில் கொண்டாடப்படும் பண்டிகை என்று பொருள். ஒரு மாதகால நோன்பு நோற்புக்கு பிறகு ஒருநாள் மகிழ்ச்சியடைய ஷரி – அத் அழைக்கிறது. ஒரு நாள் புசித்து மகிழ்ச்சியடைய அது நம்மை கட்டாயப்படுத்துகிறது. **இந்த நாளில் நோன்பு நோற்பு தடைசெய்யப்பட்டுள்ளது. (புகாரி)**

இது குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் அமைதியாக அன்பைப் பகிர்ந்துக் கொள்வதற்கான தருணமாகிறது. குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மேஜையை சுற்றியமர்ந்து காலை உணவைப் பகிர்ந்துக் கொள்ளும் இத்தருணமானது வழக்கமான தினங்களிலிருந்து ஈதுல் பித்தர் தினத்தை வேறுபடுத்திகாட்டுகிறது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஈது தொழுகையை நிறைவேற்ற செல்வதற்கு முன்பு ஒற்றைப் படை எண்ணைக்கொண்ட பேரீச்சம் பழம் உண்டு வந்தார் என்று தகவல்கள் உள்ளன. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் காலகட்டத்தில் ஈது என்பது ஈடு இணையற்ற நிலையில் உற்சாகம் மற்றும் மகிழ்ச்சிக்கு ஒத்ததாக அமைந்திருந்தது. முஸ்லீம்கள் கொண்டாடக்கூடிய ஓரேயொரு பண்டிகை என்பது உண்மையில் ஈது தினங்கள் மட்டுமாகத்தான் இருந்தது. ஒரு சிறப்புமிக்க பிரார்த்தனையுடன்தான் நாம் ஈது கொண்டாட்டத்தில் நுழைகிறோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

ஆகவே, ஒரு முஸ்லீம் தனது படைப்பாளன் தன்னிடம் காட்டிய அனைத்து உதவிகளுக்கும் மிகுந்த பிரார்தனைகள் மூலம் நன்றி செலுத்தி இத்திருநாளைக் கொண்டாடுகிறார். இது சகோதரத்துவதை பெறுவதற்கும், தாராள மனப்பான்மையைக் காண்பிப்பதற்கும் மற்றும் மன்னிப்பதற்குமான தருணமாகிறது. ஈது தொழுகையை நிறைவேற்றியப்பின் நாம் தூய்மையான இதயத்துடன் வீட்டிற்கு திரும்பிசென்று அந்நாள் முழுவதும் குடும்பத்தினருடன் அன்பாக செலவிட வேண்டும்.

ஹஸ்ரத் அயிஷா (ரலி) அவர்கள் தெரிவிக்கிறார் **“ஈது நாளில் திரு நபி (ஸல்) அவர்களின் முன்னிலையில் சில கவிதைகளைக் கேட்டுக்கொண்டிருந்த போது தனது தந்தையாகிய ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் தன்னை சந்தித்தார்.** (புகாரி)

மேலும் இந்நாளில் இஸ்லாமிய முறைப்படி உண்ணுவதும் கொண்டாடுவதும் ஒரு நற்செயலாகிறது. ஆனால் நீங்கள் எல்கைக்கு அப்பால் செல்லாமலிருங்கள். அதாவது அல்லாஹ் உங்களுக்கு உத்தரவிட்டதைதவிர அதிகப்படியான செயல்களை செய்யாதீர்கள். சிறப்புமிக்கவகையில் ஈது விருந்துகள் நீங்கள் அமைக்க வேண்டாம் அதைப்போலவே கவ்வாலி (Qawwali parties) விருந்துகளும் தேவையில்லை. ஏனெனில் அத்தகைய விருந்துகளில் பாடல், நடனம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடைபெறும். நீங்கள் இரவு முழுவதும் புசித்தவாறு இருக்காதீர்கள். இல்லை! இது ஒரு போதும் ஈதுல் பித்தரின் தத்துவமல்ல. நாம் அனைவரும் விதிவிலக்கு இல்லாமல் அல்லாஹ் நமக்கு அனுமதித்தவற்றின் எல்லைக்குள் இருந்து மட்டுமே செயல்பட வேண்டும். நாம் ஒரு மாதகாலம் தியாகங்கள் புரிந்தோம், புனித ரமலான் மாதத்தில் நாம் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிந்தோம், ஆகவே நம்முடைய பயபக்தி மற்றும் அவனுடைய விருப்பத்திற்கு அடிபணிந்ததற்கும் அல்லாஹ் நமக்கு வெகுமதிகளை வழங்குவான். அல்லாஹ் தனது அடியார்களுக்கு சகித்துக் கொள்ள முடியாத அளவிற்கு ஒருபோதும் சுமைகளை வழங்குவதில்லை. தியாகங்களை செய்யும் படி அவன் தனது அடியார்களுக்கு கட்டளையிடுகிறான். பின்னர் அவன் அவர்களுக்கு அதற்கேற்ப வெகுமதிகளை வழங்குகிறான்.

இந்த தற்காலிகமான மண்ணுலகில் நாம் இறை கட்டளைகளுக்கு கட்டுபட்டு வாழுகிறோம். அதன்விளைவாக நித்தியமான விண்ணுலகில் என்றென்றும் சுதந்திரம் பெற்றவர்களாக நாம் மாறுகிறோம். இது அல்லாஹ் நம்பிக்கையாளர்கள் மீது ஏற்படுத்தும் ஒரு வகை கட்டுப்பாடாகும். எனவே நித்திய மகிழ்ச்சியை அனுபவிக்க இந்த தற்காலிகவுலகின் சில நாட்களில் மிகவும் நெகிழ்வான கட்டளைகளுக்கு கீழ்ப்படிவது நல்லதுதான். இந்த முழுமையான கீழ்படிதலுக்கு அல்லாஹ் ஒரு

மிகபெரிய சொர்க்கத்தை வாக்குறுதி அளித்துள்ளான், மட்டுமின்றி அந்த நித்திய வாழ்விற்கான வீட்டில் நமது அனைத்துவகையான ஆசை மற்றும் ஆர்வங்கள் நிறைவேறப்படும். ரமலான் மூலம் நமக்கு வழங்கப்படும் பயிற்சி என்பது நிச்சயமாக அல்லாஹ் நமக்கு அளித்த நிகரற்ற வரமாகும். ஒரு மாதகால தியாகங்களுக்கு பிறகு அவன் நமக்கு ஒரு கொண்டாட்டத்தை வழங்குகிறான். மேலும் இந்த பாதையில் தொடர்ந்து பயணம் மேற்கொள்ளவும், அதே பழக்கங்களை வளர்த்துக் கொள்ளவும் அவன் ஊக்குவிக்கின்றான். எனவே அப்பாதையில் பயணம் மேற்கொள்வதன் மூலம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் நம்முடைய நம்பிக்கையின் பலனைத் தொடர்ந்து நாம் பெறுகிறோம்.

ஈது நாளில், ஒவ்வொருவருக்கும் ஏழைகளைக் குறித்து பிரத்யேகமான ஒரு சிந்தனை இருக்க வேண்டும். உங்கள் தொண்டு, கருணை மற்றும் பிரார்த்தனை ஆகியவற்றில் நீங்கள் ஏழைகளைப் பற்றி சிந்தித்தவாறு செயல்படவேண்டும். ஒருபோதும் அதனை மறந்து நீங்கள் செயல்படாமலிருங்கள். ஈது திருநாள் மிகுந்த மகிழ்ச்சிக்குரிய ஒரு நாளாகிறது. அந்நாளினை ஏழைகளுடனும், அன்றாட வாழ்கையில் வாழ்வாதாரத்திற்கு போராடுகின்றவர்களுடனும் பகிர்ந்து கொள்ள வேண்டியது நமது கடமையாகிறது. ஏனெனில் இது, அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதற்கும் ஈது கொண்டாட அவர்களுக்கு உதவுவதற்குமான ஒரு வழியாகிறது. இந்த நோக்கத்துடன்தான் ஷரி-அத் அனைத்து முஸ்லீம்களுக்கும் “சத-காத்துல்-பித்ரை” விதித்துள்ளது. ஆகவே நான் ரமலான் மாதத்தில் கூறியது போலவே ஒவ்வொருவரும் கட்டாயமாக 100- ரூபாய் செலுத்த வேண்டும் (மௌரீஷியஸ் ரூபாய் - ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு முக்கிய உணவுகளின் மதிப்பு) ஒவ்வொரு குடும்பத்தை சார்ந்த ஒவ்வொரு உறுப்பினர்களும் ஈது திரு நாள் தொழுகைக்கு முன்னதாகவே அத்தொகையை செலுத்த வேண்டும். அவ்வாறேயானால், ஏழைகளுக்கும் ஈது திருநாளின் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும். ரமலான் - ஈது வரிசை இஸ்லாத்தில் மிகவும் பொதுவான ஒரு கருத்தை வலியுறுத்துகிறது. இவையாவும் தியாகங்களாகும், அத்தியாகங்கள் நமக்குள் மகிழ்ச்சியை உருவாக்கிறது. ஒரு மாதகால தியாகங்களுக்குப்பிறகுதான் ஈது

திருநாள் வந்தடைகிறது. அது நேர்மாறாக நிகழ்வதல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

ஈது நாள் ஒரு விடுமுறை நாளாகிறது. ஆகவே இந்நாளில் நாம் சாத்தானால் இழுத்துச் செல்லப்படுவோம், ரமலானின் போது நாம் கஷ்டப்பட்டு குவித்த அனைத்து நற்செயல்கள் மற்றும் நற் இயல்புகளை இழந்துவிடுவோம். பழைய கெட்ட பழக்க வழக்கங்களுக்கு திரும்புவது, தன்னைத் சுத்தப்படுத்திக் கொண்டப்பின் தன்னை அசுத்தப்படுத்துவதாகும். ஐந்து வேளைத் தொழுகையை முறைப்படி நிறைவேற்றுவது இப்போது நமக்கு எளிதானதாகும். நிகழ்ச்சியின் தாளத்திற்கேற்ப நமது கணினி செயல்படவேண்டும்.

தஹ்ஜுத் மற்றும் மேலதிக இறை வணக்கம் ஆகியவை அல்லாஹ்வுடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கான வழிகளாகிறது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விவரிக்கின்றார். அதாவது அல்லாஹ் கூறினான். **“நான் அவனுக்கு கட்டளையிட்ட மதக்கடமைகளை நிறைவேற்றுவதை விட மேலாக என்னை நேசிக்கும் வேறு எதையும் நான் அவரிடத்தில் எதிர்பார்க்கவில்லை. எனது அடியார் தொடர்ந்து மேலதிக பிரார்தனைகள் வழியாக என்னிடம் அன்பு மற்றும் நெருக்கத்தை ஏற்படுத்துகிறார். அதனால் நான் அவரை அதிகமாக நேசிக்கிறேன். நான் அவரை நேசிக்கும் போது அவர் கேட்கும் செவியாக நான் மாறுவேன். அச்செவிமூலம் அவர் கேட்கிறார். நான் அவரது கண்களாக மாறுவேன், அக்கண்களால் அவர் பார்வையிடுவார். மேலும் அவரது கை மற்றும் கால்களாக நான் மாறுவேன், அதன் மூலம் அவர் செயல்படுகிறார். அவர் என்னிடம் எதுவொன்றை கேட்டாலும் நான் அதை நிச்சயமாக அவருக்கு வழங்குவேன். அவர் என்னிடம் அடைக்கலம் கேட்டால் நிச்சயமாக நான் அவருக்கு அடைக்கலம் கொடுப்பேன்.** (புகாரி)

ஆகவே எவர் ஒருவர் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு, அவனுக்க கீழ்படிந்தவாறு இருக்கின்றாரோ, அவர் இறை பாதுகாப்பை பெறுவார். அத்தகைய அடியார்களுக்கு அல்லாஹ் அடைக்கலம் வழங்குபவனாக நிலை

கொள்கிறான். சட்டபூர்வமான (ஹலாலான) அவருடைய அபிலாஷைகளை உணர்ந்து அவருக்கு உதவுவதற்காக அல்லாஹ் அவருடன் இருக்கிறான்.

மேலும் ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பு, தராவிஹ் மற்றும் மேலதிக தொழுகைகள் போன்றவை தக்வாவை பெறுவதற்கான வழிமுறைகளாகிறது. அல்லாஹ் கூறுகிறான்.

**“நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று உங்களுக்கும் அது கடமையாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர் ஆகலாம்.”** (2:184)

எனவே ஒருவர் இம்மதத்தில் ஆன்மீக மூலதனத்தை அதிகரிப்பதற்காக இயன்றவரை முயற்சிக்க வேண்டும். ரமலானின் போது அனைத்துவகையான பாவசெயல்களிலிருந்தும் விலகியிருக்க வேண்டும். அவ்வாறேயானால் ஆண்டு முழுவதும் மிக சிறந்த முறையில் முன்செல்ல முடியும். ரமலானுக்கு பின்னர் ஈது நாள் வந்தடைகிறது. எனவே மகிழ்ச்சி மற்றும் கீழ்படிதலுடன் நமக்கு இருப்போம்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் தெரிவித்திருப்பதாக ஒரு நபிமொழியில் காணலாம். அல்லாஹ்வின் தூதர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள்

**“லைலத்துல் கத்ர் இரவு வந்துவிட்டால் வானவர்களின் ஒரு கூட்டத்துடன் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு இறங்குகிறார்கள், அவ்விரவில் நின்ற நிலையிலும், அமர்ந்த நிலையிலும் அல்லாஹ்வை திக்ர் செய்து கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் அந்த மலக்குகள் துவா இறைஞ்சுகிறார்கள்”**

பின்னர் ஈது திருநாள் வந்தடையும்பொழுது அல்லாஹ் அவர்களைப்பற்றி பெருமையுடன தனது மலக்குகளிடத்தில் கூறுவான்

**எனது அமரர்களே! தொழிலாளி அவனது வேலையை முழுமையாக முடித்த பின்னர் அவனுக்கு என்ன கூலியை வழங்கிட வேண்டும். அப்பொழுது அமரர்கள்,**

எங்கள் இறவைா! அந்தத் தொழிலாளிக்கு முழுக் கூலியும் வழங்கிவிட வேண்டும் என்று பதிலளிப்பார்கள்.

அல்லாஹ் கூறுவான் எனது அமரர்களே! ஆண் மற்றும் பெண்களாகிய எனது அடியார்களுக்கு நான் கடமையாக்கியதை அவர்கள் முழுமையாக நிறைவேற்றி விட்டனர். எனது அடியார்களே! என்னிடம் நீங்கள் இறைஞ்சுங்கள், எனது மேன்மை, மரியாதை, வல்லமை, மற்றும் உன்னதமான தன்மையின் மீது ஆணையாக நான் உங்களுக்கு நிச்சயமாக பதிலளிப்பேன். பின்னர் அல்லாஹ் கூறுவான் நீங்கள் திரும்பிக்கொள்ளுங்கள், நான் உங்களை மன்னித்து உங்கள் தீய செயல்களை நற்செயல்களாக மாற்றியிருக்கிறேன். இறைத்தூதர் (ஸல்) தொடர்ந்து கூறினர் அவர்கள் மன்னிப்பை பெற்று திரும்புகிறார்கள் (மிஸ்காத்து)

**உங்கள் அனைவருக்கும் ஈது திருநாள் நல்வாழ்த்துகள்.** அல்லாஹ் தனது அருட் கொடைகளல் உங்களை குவித்து உங்கள் இதயங்களை எப்பொழுதும் நேர்வழியில் நடத்தட்டும். அல்லாஹ் எப்பொழுதும் உங்களுடன் மகிழ்ச்சியாக இருக்க ரமலானுக்கு பிந்தைய காலமும் நற்செயல்கள் புரிந்து மிகச் சரியான முறையில் இறை வழியில் முன்செல்வதற்கு அல்லாஹ் உங்களுக்கு உதவி புரியட்டும். இன்ஷா அல்லாஹ் ஆமீன்

Translated by
*Naib Amir Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
**Amir Kerala South Zone, India**
**Kerala Contact**
**No: 9447001832**

**SIRAJ DEENSAHIB**
**Amir Tamilnadu State, India**
**Tamilnadu Contact**
**No: 7502272774**

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**